வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 06.03.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 60 பக்கங்கள் : 08

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சுரேஸ் சாலே மூன்றாவது சந்தேக நபர்!



## கொழும்பு நீதிமன்றத்தில் சி.ஐ.டி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

**2019 ஆம் ஆண்டு இலங்கையை உலுக்கிய உயிர்த்த ஞாயிறு வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் விசாரிக்கப்பட்டு வரும் அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் - ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணையில் மூன்றாவது சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ளார் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.**

கைது மற்றும் விசாரணை தொடர்பாக நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மனு ஒன்றைச் சமர்ப்பித்த போதே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இந்த விடயம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில், அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் - ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே கடந்த மாதம் 25 ஆம் திகதி பேலியகொடவில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை 90 நாட்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம்

07

# அமெ. அச்சுறுத்தலுக்கு அரசு பணியக் கூடாது!

## விமல் வீரவன்ஸ எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 06

இலங்கையின் கடற்பரப்பிற்கு அருகில் நிலை கொண்டுள்ள ஈரானிய கடற்படைக் கப்பலை கொழும்பு துறைமுகத்திற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என அமெரிக்கத் தூதரகம் அழுத்தம் கொடுத்து வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டை



07

# இலங்கை பிரத்தியேகப் பொருளாதார வலயத்திற்குள் ஈரானிய போர்க் கப்பல்

## அரசாங்கம் தீவிர கண்காணிப்பு

கொழும்பு, மார்ச் 06

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் மற்றுமொரு ஈரானிய கப்பல் காணப்படுவதாக ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

07

# ஈரானியக் கப்பலுக்கு துறைமுக அனுமதி; நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும்

## நாமல் ராஜபக்ஷ அரசிடம் வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச் 06

இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் நிலை கொண்டுள்ள மற்றுமொரு ஈரானிய கப்பல், அவசரமாக துறைமுகத்திற்குள் நுழைய அனுமதி கோரியுள்ள நிலையில், அது

07

# ஈரானிய போர் வீரர்களுக்கு இந்தியா செய்த நாய் வேலை

## சாடுகின்றார் சாமர சம்பத் எம்.பி.



கொழும்பு, மார்ச் 06

ஈரானியப் போர் வீரர்களுக்கு இந்தியா செய்தது கேவலமான செயல். சின்ன நாடாக இருந்தாலும் இந்த கேவலமான வேலைகளை நாங்கள் செய்ய மாட்டோம். இது எங்கள்

07

# அமைச்சர் விஜித ஹேரத் அவசரமாக டில்லி பயணம்!

கொழும்பு, மார்ச் 06

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று அவசரமாக இந்தியத் தலைநகர் புதுடில்லிக்குச் சென்றார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற புவிசார் அரசியல் மாநாடான "ரைசினா" கலந்துரையாடலில் பங்கேற்பதற்காகவே அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

07

# கடற்பரப்பில் பதற்றமான சூழ்நிலை; மீனவர்கள் எல்லை தாண்டவேண்டாம்

கொழும்பு, மார்ச் 06

கடற்பரப்பில் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றமையினால் எல்லை தாண்டிய கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடவேண்டாம் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் பெரும் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அந்த பதற்றமான நிலைமையின் காரணமாக பல்வேறு சம்பவங்கள்

07

# இலங்கைக்கு வந்துள்ள ஈரானியக் கப்பலின் பணியாளர்களுக்குக் கொழும்பு அடைக்கலம்

## ஜனாதிபதி அநுர பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

இலங்கைக் கடற்பரப்புக்கு அருகே சர்வதேசக் கடற்பரப்பில் தத்தளித்த ஈரானியக் கடற்கலத்தில் இருக்கும் கப்பற் பணியாளர்கள் அனைவருக்கும் கொழும்பில் அடைக்கலம் கொடுப்பதற்குத் தீர் மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடல் எல்லைக்கு

07



# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக வைத்தியத் தம்பதிகள் மோசடி!

## யாழ். பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 06

யாழில் வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பெண் ஒருவரிடம் சுமார் 30 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான பணத்தை வைத்திய தம்பதிகள் ஏமாற்றி பெற்றுக் கொண்டதாக பாதிக்கப்பட்ட பெண்ணின் தங்கை பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

# காணி உறுதிகளைப் போலியாக தயாரித்த சட்டத்தரணிக்கு 12 ஆண்டு கடூழியச் சிறை!

கொழும்பு, மார்ச் 06

சட்டவிரோதமாக போலி காணி உறுதிப் பத்திரங்களைத் தயாரித்து, நில பரிவர்த்தனையில் ஈடுபட்டு வந்த பெண் சட்டத்தரணி ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதனால், அந்தச் சட்டத்தரணிக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டணை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பொரளைப் பகுதியில் உள்ள காணி

07

# ஈரான் கப்பல் மீது அமெரிக்கா தாக்குதல் அரசு எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

## தயாசிறி ஜயசேகர சபையில் கேள்வி

கொழும்பு, மார்ச் 06

ஈரானிய கப்பலை அமெரிக்கா தாக்கிய விடயம் தொடர்பில் அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையை எடுக்கப்போகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த கேள்வியை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு வீரர்களின் நியாயமான மனக்குறைகளுக்கு தீர்வு காணப்படும்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 06

விளையாட்டு வீரர்களின் நியாயமான மனக்குறைகளுக்கு தீர்வு காணப்படும் எனவும் இனித் தடங்கலின்றி வர்ண இரவு விருது வழங்கல் நடைபெறும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், தேசிய மட்டத்தில் சாதனை படைத்த வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் “வர்ண இரவு - 2025” நிகழ்வு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் முகுந்தனின் வரவேற்புரையுடனும், கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சனின் தலைமையுரையுடனும் ஆரம்பமான இந்த நிகழ்வில், தேசிய மட்டத்தில் சாதித்த வீர, வீராங்கனைகள் மற்றும் அவர்களின் பயிற்றுவிப்பாளர்கள் என 95 பேருக்கு



விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் சாதனையாளர்களுக்கான விருதுகளையும் பணப்பரிசுகளையும் வழங்கி கௌரவித்தார்.

தனிப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும், இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு 60 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாவும் பணப் பரிசுகளாக வழங்கப்பட்டன.

குழுநிலை விளையாட்டுக்களில் முதலிடம் பெற்ற அணியின் ஒவ்வொரு வீரருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

மேலும், சாதனை படைத்த வீரர்களை உருவாக்கிய பயிற்றுவிப்பாளர்களில், முறையே முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற வீரர்களைப் பயிற்றுவித்தவர்களுக்கு 20 ஆயிரம், 15 ஆயிரம் மற்றும் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட செயலக மேலதிக மாவட்ட செயலாளர், சாவகச்சேரி பிரதேச செயலாளர், கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர், வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், விளையாட்டுத்துறை அலுவலர்கள், வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சாதாரண தர பெறுபேறுகள் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு பின்!

கொழும்பு, மார்ச் 06

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னரே வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டிற்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் 2 கட்டங்களாக நடைபெறவுள்ளன.

இதன்படி முதலாம் கட்டம் மார்ச் 12 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையும், இரண்டாம் கட்டம் ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

சாதாரண தரப் பரீட்சைக்கான செய்முறை பரீட்சைகள் ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடத்தப்படஉள்ளதாக ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இந்த மதிப்பீட்டு மற்றும் செயன்முறைப் பரீட்சை நடவடிக்கைகள் நிறைவடைந்த உடனேயே, பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதித் திகதி தீர்மானிக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# டெங்கு பாதிப்பு அதிகரிப்பு; சுகாதாரத்துறை எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 06

இலங்கையில் டெங்கு நோயின் தாக்கம் மீண்டும் அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும், நாடு முழுவதும் 13,590 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 4 மரணங்களும் பதிவாகியுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் வரையிலான தரவுகளின் படி, மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 13,943 ஆக அதிகரித்துள்ளது.

டெங்கு பாதிப்பு தொடர்பாக சமூக மருத்துவ நிபுணர் பிரஷிலா சமரவீர வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில், இந்த ஆண்டில் ஜனவரியில் 7,866 நோயாளிகளும் பெப்ரவரியில் 5,724 நோயாளிகளும் மார்ச் மாதத்தின் முதல் 3 நாட்களில் 353 நோயாளிகளும் அடையாளங்காணப் பட்டுள்ளனர்.

இதேவேளை பாதிக்கப்பட்டவர்களில் 50.6மூ வீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# வடக்கில் கடற்றொழில் அபிவிருத்தி; நோர்வே பிரதிநிதிகளுக்கு விளக்கம்

கொழும்பு, மார்ச் 06

வட மாகாண அபிவிருத்திப் பணிகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக இலங்கையின் கடற்றொழில்துறையை மேம்படுத்துவது தொடர்பாக, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் நோர்வே நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அண்ட்ரியாஸ் மோட்ஸ்ஃபெல்ட் கிராவிக் ஆகியோருக்கிடையில் விசேட இருதரப்பு கலந்துரையாடல் நேற்று முன் தினம் கடற்றொழில் அமைச்சில் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட பகுதி மக்களுக்கும் நோர்வேக்கும் இடையிலான விசேட நட்புறவையும், இலங்கையின் சமாதான செயல்பாட்டுக்கு நோர்வே அரசாங்கம் வழங்கிய பங்களிப்பையிம் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

76 வருடங்களின் பின்னர் வட பகுதி மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையில், இப்பிரதேசத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர், இலங்கையின் நிலைபேறான கடற்றொழில் நடைமுறைகளை பாராட்டியதுடன், ஒரு கடற்றொழில் தேசம் என்ற வகையில் இலங்கைக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்க நோர்வே அரசாங்கம் தயாராக உள்ளதெனத் தெரிவித்தார்.

# வன்னிப் பகுதியில் காணப்படும் சிறுகுளங்களை புனரமையுங்கள்

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, மார்ச் 06

சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் பாரிய நீர்த்தேங்கங்களை விடுத்து வன்னியில் காணப்படும் சிறுகுளங்களை புனரமைக்க நடவடிக்கையெடுக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றததில் கேள்வி நேரத்தின்போது மேற்படி கோரிக்கையை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் மேலும் தெரிவிக்கையில்-

எனது கேள்விக்கு பதிலளித்த விவசாய பிரதி அமைச்சர் வவுனியா மாவட்டத்தில் மட்டும் 832 பதிவு செய்யப்பட்ட குளங்கள் இருப்பதாகவும் இவை அனைத்தும் நீர்ப்பாசன தேவைக்காக பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். இவற்றில் பெரும்பாலானவை கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் பராமரிக்கப்படும் குளங்களாகும். அத்தோடு மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த பிரதி அமைச்சர் 222 கைவிடப்பட்ட குளங்களும் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன்

இக்குளங்களிலிருந்து கிட்டத்தட்ட 42,000 ஏக்கர் வயல் நிலங்கள் நீரை பெறுவதாக தெரிவித்தார்.

எனவே அமைச்சர் கூறிய 222 கைவிடப்பட்ட குளங்களை புனரமைப்பதனூடாக இன்னும் 10,000 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்ய முடியும்.

பாரிய நீர்த்தேக்கங்களை அமைப்பதற்கு பல மில்லியன் ரூபா நிதியை செலவழிப்பதுடன் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. இதன் மூலம் யானை-மனித மோதலையும் மேலும் வலுவடைய செய்யும் செயற்பாடே நடைபெறுகிறது. எதிர்வரும் காலத்தில் இவ்வாறான சிறிய நீர்த்தேக்கங்களை புனரமைக்கக்கூடிய நிதியை அரசாங்கம் ஒதுக்கவேண்டும்-என்றார்.

(அ)

# ஒரே பாலினத்தவரை இலக்காக கொண்ட சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கவில்லை

## மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 06

இலங்கையில் ஒரே பாலினத்தவரை இலக்கு வைத்த சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதில்லை அல்லது மேம்படுத்துவதில்லை என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று முன் தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

ஒரே பாலினத்தவர் சுற்றுலாத் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கி சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரினால் வெளியிடப்பட்ட கடிதத்தின் சட்டபூர்வ தன்மையை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த திட்டங்களுக்கு ஆதரவளிப்பதாகக் கூறி ஏற்கனவே வெளியிடப்பட்ட கடிதம் தற்போது வாபஸ் பெறப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதிகார சபையின் இந்த கொள்கை முடிவை அடுத்து, மனுதாரர்கள் தமது மனுவை மீளப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தனர்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.03.2026 வெள்ளிக்கிழமை

விசுவாவசு வருடம், மாசி 21

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# இந்து சமுத்திரத்தில் இந்திய வல்லமை குறித்து எழும் கேள்விகள்

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் கடல் பிராந்தியத்துக்கு வெளியில் (காலியில் இருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால்) கடந்த செவ்வாயன்று இரவு அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் தாக்குதலில் ஈரானிய போர்க்கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் மத்திய கிழக்குப் போர் எமது பிராந்தியத்துக்கும் விரிவடையக்கூடிய ஆபத்தை வெளிக்காட்டுகிறது.

இந்திய கடற்படையின் விருந்தாளியாக அந்த ஈரானிய கப்பல் தென்னிந்தியாவில் விசாகபட்டினத்தில் இடம்பெற்ற சர்வதேச கடற்படை பயிற்சியில் பங்கேற்று விட்டு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே அது மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது. 18 நாடுகளின் போர்க்கப்பல்களுடன் இந்த பயிற்சியில் இலங்கை கடற்படையின் சாகர, நந்திமித்ர என்ற கப்பல்களும் பங்கேற்றிருந்தன.

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு வெளிப் பிராந்தியக் கடற்பரப்பில் வேறு நாட்டுப் போர்க் கப்பலை அமெரிக்க கடற்படை மூழ்கடித்த முதற் சம்பவம் இது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அறிவித்தார். தாக்குதலையடுத்து ஈரானியக் கப்பல் அவசர உதவிக்கு விடுத்த அழைப்பையடுத்து விரைந்த இலங்கை கடற்படை 32 ஈரானியர்களைக் காப்பாற்றியது. 87 ஈரானிய கடற்படை வீரர்கள் பலியானதாக அறிவிக்கப்பட்டது. மேலும் பலரைக் காணவில்லை.

விசாகபட்டினத்தில் இருந்து திரும்பும் வழியில் கொழும்பு துறை முகத்துக்கு வருகை தருவதற்கு ஈரானிய கப்பல் வேண்டுகோள் விடுத்த தாகவும் இராஜதந்திர பதற்றநிலைக்கு மத்தியில் இலங்கை அரசாங்கம் அந்த வேண்டுகோளைப் பரிசீலித்துக் கொண்டிருந்த வேளையில் அமெரிக்க நீர்மூழ்கியின் தாக்குதல் இடம்பெற்று விட்டதாகவும் கூறப்படுகிறது.

இலங்கையின் கரையோரத்துக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் தாக்குதல் இடம்பெற்ற போதிலும், விசாகபட்டினத்தில் இருந்து ஈரானியப் போர்க்கப்பல் புறப்பட்ட நேரத்தில் இருந்து அதை அமெரிக்க நீர்மூழ்கி கண்காணித்துக் கொண்டிருந்திருக்கிறது என்பது தெளிவானது.

இந்த சம்பவம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை அல்லது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதில் இந்தியாவுக்கு இருக்கும் வல்லமை குறித்து கேள்விகளை கிளப்பியிருக்கிறது.

தனது அயலகக் கடற் பிராந்தியத்தில் பகைமை நோக்கத்துடன் வெளிநாட்டு நீர்மூழ்கியொன்று நடமாடியதை இந்தியாவினால் கண்டு பிடிக்க முடியவில்லை. கடற்படைப் பயிற்சிக்காக அழைத்த நேச நாடொன்றின் போர்க் கப்பலின் பாதுகாப்பை (அதுவும் தனது செல்வாக்குப் பிராந்தியம் என்று இந்தியா உரிமை கோருவதுடன் அதன் கடற்படை கிரமமாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஒரு கடற்பரப்பில்) உறுதி செய்ய இந்தியாவினால் முடியவில்லை.

அமெரிக்க நீர்ழ்கியின் தாக்குதல் இந்தியாவின் கடல்சார் கோடிப் புறத்தில் இடம் பெற்றிருக்கக்கூடிய போர்ச் சம்பவம் என்பதற்கு அப்பால் அது புதுடில்லியின் கேந்திர முக்கியத்துவ வியூகங்களில் ஏற்பட்ட ஒரு பின்னடைவைக் குறித்து நிற்கிறது.

இந்தியாவின் கோடிப் புறத்தைப் போர் வலயமாக்க அமெரிக்காவினால் முடிந்திருக்கிறது. அதே கோடிப்புறத்தில் இந்தியாவின் அதிகாரம் குறித்து அசௌகரியமான கேள்விகள் எழுகின்றன.

# மாணவிகளின் தண்ணீர் போத்தலில் மர்மமான முறையில் மாத்திரைகள்

## பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, மார்ச். 06

வென்னப்புவ பகுதியிலுள்ள சர்வதேச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவிகளின் குடிநீர் போத்தல்களில் மர்மமான முறையில் மாத்திரைகள் கலவை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் 8 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மூன்று மாணவிகள், காலைக் கூட்டத்தை முடித்துவிட்டு வகுப்பறைக்குத் திரும்பியுள்ளனர்.

இதன்போது, ஒரு மாணவியின் தண்ணீர் போத்தலை அவதானித்தபோது, அதற்குள் ஏதோ ஒரு மாத்திரை கரைந்து நுரை பொங்கிய நிலையில் இருந்துள்ளது.

இதனால், அச்சமடைந்த மாணவிகள், அந்தப் போத்தலில் இருந்த நீரைத் தவிர்த்துவிட்டு, மற்றுமொரு மாணவியின் தண்ணீர் போத்தலில் இருந்த நீரைப் பகிர்ந்து அருந்தியுள்ளனர்.

தண்ணீரை அருந்திய போது அதில் அதிக கசப்புத் தன்மை இருப்பதை மாணவிகள் உணர்ந்துள்ளனர்.

உடனடியாக அந்தப் தண்ணீர் போத்தலை சோதித்துப் பார்த்தபோது, அதனுள்ளும் மூன்று மாத்திரைகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து உடனடியாக அவர்கள் தமது ஆசிரியையிடம் முறையிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மூன்று மாணவிகளையும் பாடசாலை அதிபர் உடனடியாக வென்னப்புவ பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு அழைத்துச் சென்று பரிசோதனைக்கு உட்படுத்தினார்.

அங்கு மாணவிகளுக்கு பாரிய உடல்நலப் பாதிப்புகள் ஏதுமில்லை என மருத்துவர்கள் உறுதிப்படுத்தியதையடுத்து, அவர்கள் மீண்டும் பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

எனினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறித்த மாணவிகள் மூவரும் பின்னர் மாரவில ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தண்ணீர் போத்தல்களில் மாத்திரைகளை கலவை செய்தது யார்? அதன் பின்னணி என்ன? என்பது குறித்து வென்னப்புவ பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

# ஏப்ரல் மாதம் இறுதி வரை தட்டுப்பாடின்றி எரிபொருள்!

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் உறுதி

கொழும்பு, மார்ச் 06

இலங்கையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இறுதி வரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழல், இலங்கையின் எரிபொருள் இறக் குமதியில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த வில்லை என கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இதேவேளை 90,000 மெற்றிக்தொன் மசகு எண்ணெயை ஏற்றிய கப்பல் ஒன்று, எதிர்வரும் மார்ச் 11ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது என அவர் கூறினார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைரா துறைமுகத்திலிருந்து நேற்று முன் தினம் இரவு புறப்பட்ட இந்தக் கப்பல், தற்போது இலங்கையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

மத்திய கிழக்கில் சவால்கள் நிலவினாலும், இலங்கைக்கு மசகு எண்ணெயைத் தடையின்றி கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# பொலிஸாரை தாக்கி சீருடையை கிழித்த லொறி சாரதி கைது

களுத்துறை, மார்ச். 06

ஆபத்தான முறையில் லொறியைச் செலுத்திய நபரைக் கைது செய்யச் சென்ற இரண்டு பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கி, அவர்களின் சீருடையைக் கிழித்ததாகக் கூறப்படும் லொறி சாரதி ஒருவரைக் கைது செய்தோம் என்று களுத்துறை தெற்கு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபராவார்.

நேற்றுக்காலை சந்தேகநபர் பலாத்தொட்ட வீதியிலிருந்து கட்டுக்குருந்த நோக்கி லொறியைச் செலுத்தியதுடன், நாகொட சந்தியிலுள்ள வீதித்தடையில் வழிமறித்துச் சோதனையிட்ட போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் பின்னரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டார் என்று பொலிஸார் கூறினர்.

தாக்குதலுக்கு இலக்கான இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் நாகொட போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர் மேற்கொண்ட கத்திக்குத்துத் தாக்குதலில் அதிகாரி ஒருவரின் இடது கையில் வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது.

(எ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**கடகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சகோதரர்களால் பயனடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும்.

**சிம்மம்**
குடும்பத்தில் இதுவரை வந்த கூச்சல் குழப்பங்கள் விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும். சோர்வு நீங்கி சுறுசுறுப்பாவீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப்பார்ப்பார்கள் உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். சக ஊழியர்களை பகைத்து கொள்ளாதீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**துலாம்**
உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வியாபாரத்தில் முதலீடு செய்யலாம். சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள். கவனம் தேவை.

**விருச்சிகம்**
ராஜதந்திரமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். ஆடை ஆபரணம் சேரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**தனுசு**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சக ஊழியர்களின் ஆதரவுக் கிடைக்கும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். தள்ளிப் தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். உறவினர்களின் ஆதரவு கிட்டும். நிம்மதி உண்டு. உற்சாகமான நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவை.

**மீனம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும். மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

# முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

முல்லைத்தீவு, மார்ச்.06
முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 2017. 03. 08 அன்று ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்பு போராட்டம் எதிர்வரும் 08 ஆம் திகதி 9 ஆண்டுகளை நிறைவு செய்து பத்தாவது ஆண்டில் தொடரவுள்ளது.

இந்த நிலையில், தங்களுடைய உறவுகளை இராணுவத்திடம் கையளித்த வட்டுவாகல் பகுதியில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் குறித்த சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் பரமானந்தம் இவ்வாறு குறிப்பிட்டார். "நாங்கள் எங்களுடைய உறவுகளை கையளித்த வட்டுவாகல் பாலப் பகுதியில் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 09. 30 மணிக்கு மாபெரும் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

சர்வதேச நீதியை கோரிய போராட்டத்துக்கு அரசியல் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்."- என்றார். (எ)

# யூனியன் கல்லூரியின் விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச். 06
தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி நாளை காலை 08. 30மணிக்கு கல்லூரி அதிபர் தி. வரதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் ரி. நந்தகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். உதயபாலாவும் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர். ந. கஜேந்திரனும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் எஸ். அன்ரன் மற்றும் பிரான்ஸ் பழைய மாணவர் சங்க உறுப்பினர் எஸ். ராஜகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (எ)

# கடமைகளை பொறுப்பேற்ற பொலிஸ் அதிகாரி சம்பத்

யாழ்ப்பாணம், மார்ச். 06
அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக பிரதான பொலிஸ் பரிசோதகர் சம்பத் ஹீங்கந்த நேற்று முன்தினம் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.



கடந்த நான்கு மாதங்களாக ஹற்றன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய இவர் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கமைய அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக தனது கடமைகளை ஏற்றுக் கொண்டார். (எ-03)

## சஞ்சிகை வெளியீடும் குறுந்திரைப்பட விழாவும்

யாழ்ப்பாணம், மார்ச் 05
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சஞ்சிகை "கனலி" - இதழ் 06 வெளியீடும், குறுந்திரைப்பட விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சி. சிறிசற்குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக கலைப் பீடத்தின் பதில் பீடாதிபதி கலாநிதி கி. சண்முகநாதனும் ஊடகத்துறைப் பேராசிரியர் எஸ். ரகுராமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கனலி சஞ்சிகை வெளியீட்டைத் தொடர்ந்து சஞ்சிகைக்கான கருத்துரையை கல்வியியல் துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா நிகழ்த்தவுள்ளார். சஞ்சிகை வெளியீட்டினைத் தொடர்ந்து மாணவர்களால் இயக்கப்பட்ட குறும்படங்களின் திரையிடல் நடைபெறவுள்ளன.

# "சகல குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படும்"

யாழ்ப்பாணம், மார்ச். 06
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் இந்த வருடம் ஏற்பட்ட குறைபாடுகள் அனைத்தும், அடுத்த வருடம் தீர்க்கப்பட்டு சிறப்பான முறையில் அனைத்து வசதிகளோடும் திருவிழா நடைபெறும் என்று யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கு பின்னரான நிலைமைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே குரு முதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-03)

# நெல் கொள்வனவுக்காக இம்முறை 10,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

**பிரதமர் ஹரிணி சபையில் தெரிவிப்பு**

கொழும்பு, மார்ச். 06
அரசாங்கம் இம்முறை நெல் கொள்வனவுக்காக 10, 000 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது. நெல்லுக்கான கொள்வனவு விலைகளையும் அதிகரித்துள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடு நெல் 120 ரூபாய், சம்பா நெல் 130 ரூபாய், கீரி சம்பா நெல் 140 ரூபாய் என்ற அடிப்படையிலேயே அரசாங்கத்தால் நெல் கொள்வனவு முன்னெடுக்கப்படுகிறது.

நெல் கொள்வனவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தின் அனைத்து நெற் களஞ்சியசாலைகளும் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தர நிர்ணயத்துடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ள நெல்லை விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க முடியும். அதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன."- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கடன் பொறியில் சிக்கி 200 பெண்கள் தற்கொலை!

கொழும்பு, மார்ச். 06

நுண்கடன் திட்டங்களை முறையாக கையாள்வதற்கு கடந்த கால அரசாங்கங்கள் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் நுண்கடன் திட்டங்களால் நெருக்கடிக்குள்ளாகி 200 இற்கும் அதிகமான பெண்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கமாட்டார்கள். நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் சட்டமியற்றாது என்று பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாராச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசாங்கம் கலக்கமடையவில்லை. எதிர்க்கட்சிகள் இன்று கலக்கமடைந்து மக்களை குழப்பமடையச் செய்கின்றன. போலியான விடயங்களை குறிப்பிட்டு மக்களை திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள். நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அல்லது மக்களுக்கு எதிரான வகையில் சட்டமியற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது. ஏனெனில் இது மக்களுக்கான அரசாங்கம்.

மக்களுக்கு எதிராக கடந்த காலங்களில் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் தற்போது கட்டம் கட்டமாக திருத்தம் செய்யப்படுகின்றன. மக்களுக்கு இணக்கமான வகையில் புதிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இதன் ஓர் அங்கமாகவே நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது."- என்றார். (எ)

## மத்துகமவில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மார்ச். 06

மத்துகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றை இலக்கு வைத்து நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. குறித்த வீட்டுக்கு மாத்திரம் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்துகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச். 06

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டலங்க பகுதியில், பெருமளவான ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் பதிவானது.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 250 கிராம் 510 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (எ)

## 2 கோடி ரூபாய் இலஞ்சம்: அதிகாரி விளக்கமறியலில்

கொழும்பு, மார்ச். 06

இரண்டு கோடி ரூபாய்க்கும் அதிக பணத்தை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் சுகாதார அமைச்சின் ஓய்வுபெற்ற பிரதம எழுத்தர் ஒருவரை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் சிற்றுண்டிச்சாலையில் வைத்து இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

2018 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து சுகாதார அமைச்சுக்கு கட்டடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதற்கான வாடகை பணத்தை காசோலைகள் மூலம் செலுத்துவதில் எந்தவித தாமதமும் இன்றிச் செயல்படுவதற்காகவே சந்தேகநபர் இவ்வாறு இலஞ்சம் கோரியதாக தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ)

## நுவரெலியா, அம்பாறையில் இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, மார்ச். 06

ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், அத்துடன் அம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் பிற்பகல் 02. 00 மணிக்கு பின்னர் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக வறண்ட வானிலை நிலவும்.

மேல், சப்ரகமுவ, மத்திய, தென், ஊவா, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும், மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## தரம் குறைந்த நிலக்கரியால் 8,497 மில்லியன் ரூபா நஷ்டம்

**சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு**

கொழும்பு, மார்ச். 06

தென்னாபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தரம் குறைந்தது என்பதை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளது. இந்த தரம் குறைந்த 9 கப்பல் நிலக்கரி காரணமாக நாட்டுக்கு 8,497 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய நிலையில், இந்த நிலக்கரியை பயன்படுத்தி முழுமையான உற்பத்தித் திறனை எட்ட முடியாமல் போயுள்ளது. ரஷ்ய நிலக்கரியை விட தென்னாபிரிக்க நிலக்கரி எரியும் விகிதம் அதிகமாகவுள்ளது.

மின் உற்பத்தி நிலையத்தின் செயல்திறன் தரவுகளின்படி எதிர்பார்க்கப்படும் 5,900 முதல் 6,200 வரையான மட்டத்தை எட்ட இந்த நிலக்கரி தவறியுள்ளது. லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் அறிக்கைகளே மிகவும் துல்லியமானவை. அமைச்சோ அல்லது மின்சார சபையோ இந்தத் தரவுகளை ஏற்க மறுத்தாலும், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இவற்றை ஏற்றுக்கொண்டு தென்னாபிரிக்க நிலக்கரி தரம் குறைந்தவை என முறைப்படி அறிவித்துள்ளது."- என்றார். (எ)

## ரூ. 50 இலட்சம் இலஞ்சம் பெற்ற வர்த்தகர் கைதாகி மறியலில்

கொழும்பு, மார்ச். 06

கொழும்பு பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 50 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோத சொத்துக்கள் அல்லது உடமைகள் விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவருக்கு பிணை பெற்றுக்கொடுக்க உதவுவதாகவும், அவரது குடும்ப உறுப்பினர்கள் கைது செய்யப்படுவதைத் தடுப்பதாகவும் கூறி இவர் இந்த இலஞ்ச பணத்தை பெற்றுள்ளார்.

குறித்த வர்த்தகரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நேற்று முன்தினம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிக்கப்பட்ட அரச காணியை போராடி மீட்ட பிரதேச செயலாளர்

மட்டக்களப்பு, மார்ச். 06

நபர் ஒருவரால் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்ட அரச காணியை நீதிமன்ற நடவடிக்கை மூலம் மீட்டுத் தந்தமைக்காக, வாகரை பிரதேச செயலாளருக்கு பிரதேச சபை உறுப்பினர் பி. கைதர் நன்றி தெரிவித்தார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கேணிநகர் பகுதியில், பொதுத் தேவைக்காக காணி ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த காணியை நபர் ஒருவர் அத்துமீறி தன்வசப்படுத்தியிருந்தார். இது குறித்து பிரதேச சபை உறுப்பினர், கிராம அபிவிருத்திச் சங்கம், பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, குறித்த விவகாரம் தொடர்பில் பிரதேச செயலாளர் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுத்து, உண்மைகளைத் தெளிவுபடுத்தியதன் மூலம் அக்காணி தற்போது அரசு வசமாக்கப்பட்டுள்ளது.

அரச செலவில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ள இக்காணியில், எதிர்காலத்தில் மத்திய மருந்தகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. (எ)

# உடல் எடை தினத்தை முன்னிட்டு விசேட விழிப்புணர்வு நடைபவனி




மட்டக்களப்பு, மார்ச். 06

சர்வதேச அதிக உடல் எடை தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு நடைபவனியும் விழிப்புணர்வு நிகழ்வுகளும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

உடல் எடையை கட்டுப்படுத்துவோம் வாழ்வினை காப்போம் என்னும் தொனிப்பொருளில் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு காந்திபூங்காவிலிருந்து விழிப்புணர்வு நடைபவனி ஆரம்பிக்கப்பட்டு மட்டக்களப்பு பிரதான பேருந்து தரிப்பிடம் வரையில் சென்று அங்கிருந்து தனியார் பேருந்து தரிப்பிடத்துக்கு சென்று விழிப்புணர்வு வீதி நாடகம் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊர்வலமானது மட்டக்களப்பு நகர் ஊடாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வரை சென்று நிறைவடைந்தது. (எ)

# பசறை - ரணுகல்ல பிரதான வீதி முழுமையாக முடக்கம்

பதுளை, மார்ச். 06

பசறை - ரணுகல்ல பிரதான வீதியின் போக்குவரத்து தற்போது முழுமையாக தடைப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை புத்தலையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று ரணுகல்ல - பசறை வீதியின் நெலுவை பகுதியில் விபத்துக்குள்ளானது.

நெலுவை பகுதியில் இடம்பெற்று வரும் வீதி அபிவிருத்திப் பணிகளின் போது அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த வடிகால் கட்டுமானப் பகுதியில் பேருந்தின் ஒரு சக்கரம் சிக்கியதால் வாகனம் நிலை குலைந்து நின்றது.



மழையினால் வீதியோரப் பகுதி மண் சதுப்பாக மாறியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக கட்டுமானப் பகுதி சேதமடைந்து, பேருந்தின் சக்கரம் பள்ளத்தில் தாழ்ந்து சிக்கியதாக கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தால் குறித்த வீதியில் வாகனப் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்கள் மற்றும் சாரதிகள் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (எ)

# தொழிலாளியை தீண்டிய பாம்பு

நுவரெலியா, மார்ச். 06

நுவரெலியா, ரம்பொடை - வெதமுல்ல தோட்டத்தில் தேயிலை மலையில் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் விஷப்பாம்பு தீண்டிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெதமுல்ல தோட்ட தேயிலை மலையில் செடிகளை துப்புரவு செய்யும் பணியில் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் காலை ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, தேயிலை செடியின் அடிவாரத்தில் மறைந்திருந்த "விரியன" பாம்பு ஒன்று அங்கிருந்த தொழிலாளியைத் தீண்டியுள்ளது.

இதில், 39 வயது இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே பாதிக்கப்பட்டுள்ளார்.

பாம்பு தீண்டியதையடுத்து, குறித்த நபர் சக தொழிலாளர்களின் உதவியுடன் உடனடியாக நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (எ)

# 220 வெளிநாட்டு சிகரெட்களுடன் நுவரெலியாவில் இந்தியர் கைது

நுவரெலியா, மார்ச். 06

220 வெளிநாட்டு சிகரெட்களுடன் இந்தியர் ஒருவரும், நுவரெலியாவைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

நுவரெலியா இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, நுவரெலியா மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட அதிரடி சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் அமைந்துள்ள குறித்த இந்தியருக்கு சொந்தமான காய்கறி கடையிலேயே இந்த வெளிநாட்டு சிகரெட்கள் மீட்கப்பட்டன. (எ)

# கல்வியின் மூலமாகத்தான் விடுதலை பெற வேண்டும்

## அரியநேத்திரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச். 06

கல்விதான் எம்மை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லும். கல்வியின் மூலமாகத்தான் நாம் விடுதலை பெற வேண்டும். நாம் அனைவரும் தமிழர்களாக இருக்க வேண்டும். அதற்காக தமிழ்த் தேசியத்துக்கு பின்னால் அனைவரும் இருக்க வேண்டும். தமிழ்த் தேசியத்தை நாம் அனைவரும் வளர்க்க வேண்டும். தமிழ்த் தேசியக் கட்சியில் இருக்கின்ற உறுதியானவர்களை நாங்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - போரதீவுப்பற்று விவேகானந்தபுரம் கிராமத்தில் நடைபெற்ற உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# பிரஜா சக்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம் நுவரெலியாவில் விழிப்புணர்வு நிகழ்வு

நுவரெலியா, மார்ச் 06

நுவரெலியா மாவட்டத்திற்கான பிரஜா சக்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பிரஜா சக்தி தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கங்கள், எதிர்கால திட்டங்கள், அவற்றை செயல்படுத்தும் விதம், கிராம மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை அடையாளம் காணுதல், திட்ட அறிக்கைகள் தயாரித்தல், அவற்றை செயல்படுத்துதல், கிராமங்களிலுள்ள வறுமையை ஒழித்தல் போன்ற விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதியமைச்சர்கள் வசந்த பியசிறி, மதுர செனவிரத்ன, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் அலுவிஹார, அனுஷ்கா திலகரத்ன, அமைச்சின் செயலாளர் சம்பத் மெனிக்கநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கபில குணரத்ன, மாவட்ட செயலாளர்கள், பிரஜா சக்தி தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மீண்டும் யானைகள் பட்டாளம்

காரைதீவு, மார்ச். 06

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக அறுவடை நிறைவடைந்து வரும் நிலையில், விளை நிலங்களை நோக்கிய யானைகளின் வருகை மீண்டும் அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை காரைதீவு - அம்பாறை பிரதான வீதியில் வளத்தாப்பிட்டி சந்தி ஊடாக யானைகள் பட்டாளமாக வீதியைக் கடந்தன. ஒரு பெரிய கூட்டமாக யானைகள் வீதியில் நின்றமையால், அந்த வீதியூடாக பயணித்த வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் நீண்டநேரம் காத் திருக்க வேண்டிய நிலை ஏற்பட் டது.

அறுவடை கால முடிவில் வயல் நிலங்களில் எஞ்சியிருக்கும் பயிர்களைத் தேடி வரும் யானைகள், தற்போது குடியிருப்புகளையும் பிரதான வீதிகளையும் ஆக்கிரமித்து வருகின்றன. அடுத்து வரும் விதைப்பு காலத்துக்கு முன்னதாக யானைகளின் அட்டகாசம் மேலும் அதிகரிக்கக்கூடும் என பிரதேச மக்கள் மற்றும் விவசாயிகள் மிகுந்த அச்சம் வெளியிட்டுள்ளனர்.

யானைகளின் ஊடுருவலை கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் வனஜீவராசிகள் திணைக்களம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ09)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த...

அனுமதி அளித்திருந்தது.

இந்த மனுவை விசாரணை செய்த நீதவான் இசுறு நெத்திகுமார, சுரேஸ் சலேயைச் சந்தேக நபராகக் குறிப்பிடுவதற்கான ஆதாரங்கள் உள்ளதா என்று நீதவான் விசாரித்த போது, இதுவரை மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளின்படி பல ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக் கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - வவுணதீவில் இரண்டு பொலீஸ் அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர் நடந்த சாய்ந்தமருது குண்டுவெடிப்பு தொடர்பான முக்கிய தகவல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும், சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் பொலீஸ் அத்தியட்சகர் ஒருவரும், மேலும் இருவரும் சந்தேக நபர்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தினர் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தியதோடு, சுரேஸ் சாலேயின் தடுப்புக் காவல் விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கை ஒன்றையும் நீதவானிடம் முன்வைத்தனர்.

மேலும், தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்குகு உட்படுத்தப்பட் டிருக்குகும் சுரேஸ் சாலேயை மேலும் நெருக்கமாகக் கண்காணிக்க அனுமதிக்கக் கோரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் நீதி மன்றத்திடம் விண்ணப்பம் ஒன்றையும் சமர்ப்பிக்கப்பட்டது. (அ-ஒ)

## அமெரிக்க...

முன்வைத்துள்ளார்.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அமெரிக்காவின் அழுத்தங்களுக்குப் பணிகிறாரா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கப்பல் விவகாரத்தில் கொழும்பு துறைமுக அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கடும் அழுத்தம் கொடுத்துள்ளதாக விமல் தெரிவித்தார்.

குறித்த கப்பலை துறைமுகத்திற்குள் அனுமதித்தால் வான்வழித் தாக்குதல் நடத்தப்படும் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெறவுள்ள சர்வதேச இராணுவக் கண்காட்சிக்குச் சென்ற மூன்று ஈரானியக் கப்பல்களில் ஒன்று தற்போது பாணந்துறை கடற்பரப்பிற்கு அப்பால் ஆழ்கடலில் நிலைகொண்டுள்ளது. இந்தக் கப்பல் நேற்று முன் தினம் மாலை முதல் கொழும்பு துறைமுகத்திற்குள் நுழைய அனுமதி கோரி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த கப்பல் இராணுவ நடவடிக்கைகளுக்காக வரவில்லை எனவும், தொழில்நுட்பத் திருத்தங்கள் அல்லது அத்தியாவசியத் தேவைகளுக்காகவே அனுமதி கோருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் அணிசேராக் ஜனாதிபதி உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்திய விமல் வீரவங்ச, வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியாமல் ஜனாதிபதி செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார். (அ)

## ஈரானியக் கப்பலுக்கு...

குறித்த அரசாங்கத்தின் நிலைப் பாட்டை உடனடியாக பகிரங்கப்படுத்துமாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து தனது “எக்ஸ்” பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், தற்போதைய சூழலில் அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

குறித்த ஈரானிய கப்பல் தற்போது இலங்கையின் பிராந்திய கடற்பரப்பிற்கு சற்று வெளியே நிலைகொண்டுள்ளதாகவும், துறைமுகத்திற்குள் நுழைய அரசாங்கத்தின் அனுமதியை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இக்கட்டான சூழலில் முடிவெடுக்க அரசாங்கம் தயங்கினால், 1971ஆம் ஆண்டு பங்களாதேஷ் விடுதலைப் போரின் போது அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க கையாண்ட ராஜதந்திர அணுகுமுறையை முன்மாதிரியாகக் கொள்ளுமாறு அவர் சுட்டிக்காட்டினார்.

அன்று இந்தியா தனது வான்பரப்பை பாகிஸ்தான் விமானங்களுக்கு மூடியிருந்த போதிலும், மனிதாபிமான மற்றும் நட்பு ரீதியான அடிப்படையில் பாகிஸ்தான் விமானங்கள் இலங்கையில் எரிபொருள் நிரப்ப சிறிமாவோ பண்டாரநாயக்க அனுமதித்ததை அவர் நினைவு கூர்ந்தார். (அ)

## கற்பரப்பில்...

இடம்பெற்று வருகின்றது.

அவ்வாறு சம்பவங்கள் இடம்பெறுகின்ற பொழுது உண்மையிலே எம்முடைய கடற்றொழிலாளர்களே பாதிக்கப்படுவர்.அவ்வாறான பாதிப்பு ஏற்படுவது பொருத்தமற்ற விடயமாகும்.

நாங்களாக இருப்போமாக இருந்தால் அல்லது எங்களுடைய மீனவர்களாக இருப்பார்களானால் அது உண்மையிலே பாதிகமான விளைவுகளை தோற்றுவிக்கும் விடயமாகும்.

ஆகவே இந்த பிரச்னை சற்று தணியும் வரை எம்முடைய கடல் எல்லைகளுக்கு அப்பால் சென்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என கடற்றொழிலார்களிடம் கேட்டுக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கை பிரத்தியேக...

எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தக் கப்பல் தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்புச் சபை மற்றும் அரசாங்கம் முழுமையாக அறிந்துள்ளதாக இதன்போது அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த கப்பல் இலங்கையின் பிராந்திய கடற்பரப்பிற்குள் இல்லை என்றும், அது பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் இருப்பதாகவும் அவர் விளக்கமளித்தார்.

கப்பலில் உள்ளவர்களின் உயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அரசாங்கம் அதிகபட்ச தலையீட்டை மேற்கொண்டு வருகின்றதோடு பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், உயிராபத்துகளைத் தவிர்க்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பான முழுமையான அறிக்கை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கு...

அருகில் ஈரானியக் கடற்கலமொ ன்று இலங்கைக்கு அடைக்கலம் தேடி வந்து கரையொதுங்கியிருப்பதாக வெளிவந்த

செய்திகள் தொடர்பில் நேற்றிரவு ஊடகங்களுக்கு விளக்கமளித்த போதே ஜனாதிபதி அநுரகுமார இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“பிராந்தியத்தில் நடந்து வரும் மோதல்களுக்கு மத்தியில் இலங்கை நடுநிலையான கொள்கையையே பின்பற்றும். ஐரிஸ் புச்சர் என்ற பெயருடை இந்த ஈரானிய கடற்கலத்தில் உள்ள 208 பணியாளர்களும் கொழும்பு துறைமுகத்தில் தரையிறக்கப்படவுள்ளார்கள். அவர்களைக் கரைக்குக் கொண்டுவரும் பணியை இலங்கை கடற்படை மேற்கொள்ளும்.

பணியாளர்கள் அனைவரும் தரையிறக்கப்பட்ட பின்னர் அந்தக் கடற்கலம் திருகோணமலை துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டு அங்கு தரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன” என்றார்.

மேலும், ஈரானிய கடற் கலத்தில் 300 குழந்தைகள் இருந்ததாகக் கூறி சமூக ஊடகங்களில் பரவும் வதந்திகளையும் ஜனாதிபதி நிராகரித்தார், அந்தத் தகவல் தவறானது. குறுகிய அரசியல் லாபங்களுக்காக தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொண்ட அவர், ஒரு முக்கியமான காலகட்டத்தில் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (அ-ஒ)

## ஈரானிய போர்...

நாட்டுக்கு இழைக்க வந்த சதி என்று பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது எங்கள் நாட்டுக்கு இழைக்க வந்த ஒரு விடயம். இந்தியாவின் ஒரு யுத்தப் பயிற்சியாளர்கள் 18ஆம் ஆண்டிலிருந்து வந்திருந்தார்கள். உலகத்திலுள்ள அனைவரும் வந்திருந்தார்கள்.

ஆனால் செய்த இந்த கேவலமான செயல் எமது நாட்டைப் பகிரங்கப்படுத்துவதற்காக செய்த செயல்.

அந்த நாட்டு மக்கள் அவர்களை வரவழைத்து அவர்களது பயிற்சிகளை வழங்குவதாககக் கூறிக் கொண்டு ஏனைய நாட்டு மக்கள் வெளியே செல்லும் போது அவர்கள் எங்கே செல்வது.

அவர்கள் தானே அவர்களை அழைத்து உள்ளே எடுத்தார்கள். அவர்களை வெளியேற்றுங்கள் அவ்வாறு வெளியேற்றுவதன் காரணமாகத் தான் எமது பிரதேசத்தில் அது இழுபட்டு வந்தது.

நாங்கள் சின்ன நாடாக இருந்தாலும் கூட இந்த மாதிரியான வேலைகளைச் செய்ய மாட்டோம். நாங்கள் அவர்களைக் கொண்டு வந்து கொன்ற மாதிரித் தான் காணப்படுகின்றது. அசாதாரணமான நிலைமை காணப்படுகின்றது-என்றார். (அ)

## அமைச்சர் விஜித...

சர்வதேச கடற்பரப்பில், இலங்கைக்கு அண்மித்த பகுதியில் ஈரானிய போர்க்கப்பல் ஒன்று அமெரிக்கப் படைகளால் மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் நிகழ்ந்த சில தினங்களிலேயே அமைச்சரின் இந்த விஜயம் அமைந்துள்ளமை அரசியல் ரீதியாக அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

குறிப்பிட்ட ஈரானியப் போர்க்கப்பலானது, இந்தியாவில் நடைபெற்ற கூட்டு இராணுவப் பயிற்சியை நிறைவு செய்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போதே இந்தத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் வல்லரசு நாடுகளுக்கு இடையிலான மோதல் போக்கு அதிகரித்துள்ள சூழலில், இலங்கையின் பாதுகாப்பு மற்றும் கடல்சார் எல்லைகளின் உறுதித்தன்மை குறித்து இந்தியத் தரப்புடன் அமைச்சர் விஜித ஹேரத் முக்கிய பேச்சுகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், இப்பிராந்தியத்தில் அமைதியைப் பேணுவது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்படவுள்ளது.

இதேவேளை, பல்வேறு உலகத் தலைவர்கள் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டில், இலங்கை வெளிவிவகார அமைச்சரின் பங்களிப்பு, தற்போதைய நெருக்கடியான சூழலில் பிராந்திய உறவுகளைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் எனக் கருதப்படுகின்றது. (அ)

## காணி உறுதிகளை...

ஒன்றுக்குப் போலி உறுதி தயாரித்ததாகக் குற்றஞ் சாட்டி, 61 வயதான பெண் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கு மீதான விசாரணைகள் நேற்று கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜெயரத்ன முன்னிலையில் நடைபெற்றது. மிக நீண்ட வாதப் பிரதிவாதங்களின் பின் சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதனால், வெவ்வேறு இரு வழக்குகளிலுமாக தலா ஆறு வருடங்களாக 12 வருட கடூழிய சிறைத் தண்டணை தீர்ப்பளிக்கப்பட்டது.

இரண்டு தண்டணைக் காலங்களையும், ஏக காலத்தில் - ஆறு வருடங்களில் குற்றவாளி அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். (அ-ஒ)

## வெளிநாட்டுக்கு...

குறித்த வைத்திய தம்பதிகள் எனது அக்காவை வெளிநாடு அனுப்புவதாக கூறி இரண்டு வருடங்களாக கம்போடியா நாட்டில் தடுத்து வைத்துள்ளனர்.

எனது அக்காவை போன்று மேலும் பலர் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு உணவு மற்றும் தாங்கும் உரிய முறையில் ஏற்படுத்திக் கொடுக்காத காரணத்தினால் பலர் அடிமைகளாக அங்கு வேலை செய்வதாகவும் கூறப்படுகிறது.

குறித்த வைத்திய தம்பதியினர் நீர் கொழும்பில் வசிக்கும் இன்னுமொரு தரப்பினர் ஊடாக ஆட்களை திரட்டி வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக மோசடி வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனது அக்காவை போன்று மேலும் பலர் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கம்போடியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வைத்திய தம்பதியினரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் -என தெரிவித்துள்ளார். (அ)

## ஈரான் கப்பல் மீது...

இந்திய கடற்படைப் பயிற்சிக்காக ஈரானியக் கப்பல் இலங்கைக் கடற்பரப்பிற்கு வருகை தந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறானதொரு சூழலில் ஒரு நாடாக நாம் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளோம்.

குறிப்பாக 1971 ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்திற்கமைய இந்தியப் பெருங்கடலை ஒரு அமைதி வலயமென ஏற்றுக்கொண்டோம். ஆனால் இன்று நாம் பெரும் அச்சுறுத்தலில் உள்ளோம்.

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்கள் ஈரான் மீதான இந்தத் தாக்குதல் குறித்து பெரும் வேதனையிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர்.அரசாங்கம் இதுவரை இந்தத் தாக்குதலைக் கண்டிக்கவில்லை.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் என்ன செய்யப்போகிறது? எங்களை மேலும் சிக்கலில் தள்ளப்போகிறீர்களா? - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக் கடற்பரப்பில் மற்றுமொரு ஈரான் கப்பல்!

## அரசாங்கம் விளக்கம் அளிக்கவேண்டும் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, மார்ச் 06

இலங்கை கடல் எல்லையில் கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் மற்றொரு ஈரானிய கப்பல் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து தெளிவான அறிக்கை தேவை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

நேற்று பாராளுமன்றத்தில் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட சஜித் பிரேமதாஸ, அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் டார்பிட்டோ உதவியுடன் ஈரான் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்றும் கூறினார்.

ஈரானிய கப்பலில் இருந்த மாலுமிகளின் உயிரைக் காப்பாற்றியதற்காக இலங்கை இராணுவத்தைப் பாராட்டுவதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், இந்த சம்பவம் தொடர்பாக இராஜதந்திர ரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் இன்னும் தெளிவான அறிக்கையை வெளியிடவில்லை என்றும் கூறினார்.



இலங்கைக்கு அருகில் அத்தகைய கப்பல் அழிக்கப்பட்டது குறித்து அரசாங்கம் சபைக்கு அறிவிக்கத் தவறியது பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியலமைப்பு பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஒரு தடையாக உள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். (அ)

## மத்திய! கிழக்கு நாடுகளுடன் அமைச்சர் விஜித ஹேரத் பேச்சு



கொழும்பு, மார்ச் 06

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், மத்திய கிழக்கு முழுவதும் உள்ள வெளிவிவகார அமைச்சர்களுடன் தொடர்ச்சியான உயர் மட்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

பஹ்ரைனின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி அப்துல்லதீப் பின் ரஷீத் அல் சயானியுடனான தொலைபேசி உரையாடலிலில், பிராந்திய முன்னேற்றங்கள் குறித்த கருத்துக்களை அமைச்சர் விஜித ஹேரத் பரிமாறிக் கொண்டார்.

ஜோர்தானின் துணைப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான அய்மன் சபாடியுடனும் அமைச்சர் விஜித ஹேரத் தொலைபேசியில் பேசினார்.

இதன்போது, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

லெபனான் வெளிவிவகார அமைச்சர் யூசுப் ராகியுடனான கலந்துரையாடலில், இரு தலைவர்களும் தற்போதைய பிராந்திய முன்னேற்றங்கள் குறித்த முன்னோக்குகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இதற்கிடையில், குவைத் வெளிவிவகார அமைச்சர் ஷேக் ஜராஹ் ஜாபர் அல்-அஹ்மத் அல்-சபாவுடன் தொலைபேசியில் பேசிய அமைச்சர் விஜித ஹேரத், அமைதி மற்றும் பாதுகாப்புக்கான இலங்கையின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார். (அ)

## ஈரான் உயர் தலைவர் மறைவு: ரணில் விக்கிரமசிங்க இரங்கல்

கொழும்பு, மார்ச் 06

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்துக்குச் சென்று ஈரானின் உயர் தலைவர் அயதுல்லா அலி கமேனியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தார்.

ஈரான் தலைவரின் மறைவு குறித்து மக்கள் தங்கள் இரங்கலைத் தெரிவிக்க கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்தில் சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தூதரகத்துக்குச் சென்று இரங்கல் செய்தியில் கையெழுத்திட்டார்.

பின்னர், முன்னாள் ஜனாதிபதி தூதரக அதிகாரிகளுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார். (அ)

## இந்து சமுத்திரத்தின் அமைதியே இலங்கையின் எதிர்பார்ப்பாகும்!

### சபையில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, மார்ச் 06

இந்து சமுத்திரத்தின் அமைதிதான் இலங்கையின் எதிர்பார்ப்பாகும். அதற்கான உரிய தலையீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது.

ஆரம்ப கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

இலங்கையின் தெற்கு கடற்பரப்பில் சர்வதேச கடல் எல்லையில் ஈரான் போர்க்கப்பலொன்று தாக்குதலுக்கு இலக்கான விவகாரம் தொடர்பிலேயே அவர் வினா எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளித்த ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

"ஈரான் கப்பலில் இருந்து 32 பேர் மீட்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

87 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை வைப்பதற்கு குளிரூட்டப்பட்ட கொள்கலன் வசதி இல்லை. எனவே, தனியார் துறையிடமிருந்து இரு கொள்கலன்கள் பெறப்பட்டுள்ளன.

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு இணைந்து இதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்கின்றன.

இந்து சமுத்திரத்தின் அமைதி தான் எமது எதிர்பார்ப்பாகும். அதற்காக அனைத்து தலையீடுகளும் மேற்கொள்ளப்படும்.

சர்வதேச சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் நாம் செயற்பட்டுள்ளோம்" - என்றார். (அ)

## ரியாத், டுபாய் விமான சேவைகள் இரத்து

கொழும்பு, மார்ச் 06

ரியாத் மற்றும் டுபாய் நோக்கி நேற்று பயணிக்கவிருந்த சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான சில வானூர்தி சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சிவில் வானூர்தி போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை மற்றும் வான்பரப்பு கட்டுப்பாடுகள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு வான்பரப்பில் நிலவும் பாதுகாப்பற்ற சூழல் காரணமாக, ஏனைய சில வானூர்திச் சேவைகளும் மாற்றுப் பாதைகளில் இயக்கப்படவுள்ளன. இதனால் பயண நேரங்கள் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மது அருந்துவோரால் பொது இடங்களில் 71 வீத பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை

கொழும்பு, மார்ச் 06

மது அருந்தியவர்களினால் பொது இடங்களில் தமக்கு பாதுகாப்பு இல்லை என இலங்கையில் 71 வீதமான பெண்கள் தெரிவித்துள்ளனர் என புதிய ஆய்வொன்று வெளிப்படுத்தியுள்ளது.

2026 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் நடத்திய இந்த ஆய்வில், நாட்டின் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 15 வயதுக்கு மேற்பட்ட 1,157 பெண்கள் பங்கேற்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர், மதுபோதையில் இருப்பவர்களால் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்து முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

குறித்த ஆய்வின்படி, பெண்கள் அதிகம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் இடங்களாக பொது போக்குவரத்து, வீதிகள், பேருந்து மற்றும் தொடருந்து நிலையங்கள், பொதுப் பூங்காக்கள், வாடகை வாகன சேவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும், மதுபோதையில் இருப்பவர்களால் 55.4 வீதமான பெண்கள் வாய்மொழி மூலமான துன்புறுத்தல்களுக்கும், 48.8 வீதமானோர் அசௌகரியமான முறையில் பின் தொடரப்படுதல் அல்லது உற்று நோக்கல் போன்ற செயல்களுக்கும் ஆளாகியுள்ளனர்.

அத்துடன், 36 வீதமான பெண்கள் உடல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொண்டதாகத் தெரிவித்துள்ளனர்.

மது அருந்தியவர்களின் நடத்தை மற்றும் அவர்களிடமிருந்து வீசும் துர்நாற்றம் காரணமாக 67 வீதமான பெண்கள் மிகுந்த கவலை அடைவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு, துன்புறுத்தல்களை எதிர்கொள்ளும் போது, 66.2 வீதமான பெண்கள் அச்சம் காரணமாகவும், 47.6 வீதமானோர் அவமானம் காரணமாகவும் எவ்வித எதிர்ப்பையும் காட்டுவதில்லை எனத் தெரியவந்துள்ளது. (அ)

## இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவுக்கு ஜனவரியில் மட்டும் 630 முறைப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 06

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாத்திரம் 630 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில், மூன்று அரசியல் பிரதிநிதிகள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஜனவரி மாத காலப்பகுதிக்குள் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் 7 அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், நீதிமன்ற விசாரணைகளின் ஊடாக தண்டப்பணமாக அறவிடப்பட்ட சுமார் 4 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாவுக்கும் அதிக தொகை, அரச வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## காணாமற்போன யாழ்.மீனவர்கள் தமிழகத்தில் கரை ஒதுங்கினர்!

யாழ்ப்பாணம், மார்ச் 06

காங்கேசன்துறை ஊறணி கடற்பகுதியில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடிக்கச் சென்றபோது காணாமற்போன இரு மீனவர்களும் தமிழ்நாடு அரியமான் கடற்பரப்பில் வைத்து தமிழ்நாடு கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த இரு மீனவர்களும் மீன்பிடிக்கச் சென்ற நிலை யில் அவர்களின் படகு பழுதடைந்து இந்திய கடல் எல்லைக்குள் சென்றுள்ளது.

இதனை அவதானித்த இந்திய மீனவர்கள் குறித்த படகை தமது விசைப் படகால் இழுத்துச் சென்று மீனவர்களுக்கு உணவும் நீரும் வழங்கி இலங்கைக் கடல் எல்லையில் விட்டுச் சென்றனர். பின்னர் கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்ட படகு மீண்டும் இந்திய கடல் எல்லைக்குள் சென்ற நிலையில் நேற்று வியாழக்கிழமை தமிழ்நாட்டின் வடக்கு கரையில் மீட்கபட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.